# திராவிட சினிமா 12

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்

## ரங்கோன் ராதா என்று திருந்தும் ஆடவர் உலகம்?

■ வீ.மா.ச.சுபகுணராஜன்







ஒரு குற்றச்சாட்டு போன்றதொரு வாதம், திராவிட இயக்கம் மற்றும் தி.மு.க., மீது வைக்கப்படுவதுண்டு. ஏதோ திரைப்படங்களைத் தங்களது பரப்புரைக் கருவியாகக் கையாண்டார்கள் என்பதே அது. நேர்மறையாக வைக்கப்பட்டாலும், அந்த வாதம் பிழைபட்டது அல்லது குறைபட்டது என்பதே உண்மை.

அசலாக தி.மு.க.வினர் திரைப்படங்களைச் சமூக மாற்றத்துக்கான கருவியாகப் பயன்படுத்தினர் என்பதே சரியான பார்வை. ஏனெனில், படைப்பின் அத்தனை வகைகளையும் இசைவாக மக்களைச் சென்றடையும் மொழியில் படைத்தனர், திராவிட இயக்கத்தார்.

அண்ணா உள்ளிட்ட அனைவரது நாடகங்கள், புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கடிதங்கள் என அனைத்தும் சமூக, பண்பாட்டுத் தள மாற்றத்தினை நோக்கமாகக் கொண்டவையே. கலை கலைக்காகவே என்ற ஆடம்பரம் அவர்களிடம் ஒரு போதும் இல்லவே இல்லை. எனவேதான் குறுங்குழு நவீன எழுத்தாளர்களின் மதிப்பீடு குறுமதியின் வெளிப்பாடு மட்டுமே.

### சுயசாதி விமர்சகர்கள்!

1956-ஆம் ஆண்டு, மேகலா பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பாக வெளிவந்தது அண்ணாவின் 'ரங்கோன் ராதா' திரைப்படம். காசிலிங்கம் இயக்கத்தில், சிவாஜிகணேசன், பானுமதி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், கலைவாணர், எம்.என்.ராஜம் மற்றும் பலர் நடித்திருந்தனர்.

புதினத்தைத் திரைக்கதையாக உருவாக்கிய போது கதையில் சில மாற்றங்களைச் செய்திருந்தார் கலைஞர். ஆனால், அவை கதையின் போக்கையோ, உள்ளடக்கத்தையோ சிறிதும் மாற்றிவிடவில்லை. அண்ணாவின் நாடகங்களும் புதினங்களும் சிறுகதைகளும் தயக்கமின்றி, பார்ப்பனரல்லாத உயர்சாதி மற்றும் ஆதிக்க சாதியினர் எனப்படுவோரை கடுமையாக விமர்சனம் செய்தவை.

ஏதோ பார்ப்பனர் எதிர்ப்பை மட்டுமே திராவிட இயக்கம் செய்தது என்று பினாத்தி அலைபவர்கள், திராவிட இயக்கத்தவர் எழுத்துகள் மீதான நோய்க்கூறான ஒவ்வாமை கொண்டவர்கள் மட்டுமே.

உயர்சாதியினர் எனப்படுவோர் பார்ப்பனியத்தின் பிடியில் சிக்கி சமூக விரோத சக்திகளாக வாழ்வதைப் படம் பிடித்துக் காட்டுவது மட்டுமே அண்ணா மற்றும் கலைஞர் போன்றோரின் விமர்சனம், பெரியார், அண்ணா தொடங்கி அனைத்துத் தலைவர்களும் கடுமையான சுயசாதி விமர்சகர்கள். மாற்றம் வீட்டிலிருந்து தொடங்கட்டும் என்ற கோட்பாடு கொண்டவர்கள்.

### அம்பலப்படும் பெரிய மனிதர்கள்!

சமூகத்தில் பக்தி வேடமிட்டு பெரிய மனிதர்களாக, உயர்சாதிகள் எனச் சொல்லித் திரிவோரின் பணத்தாசை, பொன்னாசை, பெண்ணாசையை அம்பலப்படுத்துவதுதான் இந்தப் படத்தின் கதைக்களம். தர்மலிங்க முதலியாருக்கு ரங்கம் மனைவி. ஆனால், அவளது தங்கை தங்கத்தையும் தாரமாக்கிக்கொள்ள ஆசை. தங்கமும் அக்காவின் வசதியான வாழ்வைத் தனதாக்கிக் கொள்ள விளையும் பேராசைக்காரி. அதை ஏற்க மறுக்கும் ரங்கத்தை, 'பேயாக்கி' அவமானம் செய்து அவலத்திற்குள்ளாக்குகிறார்கள்.

கதைப் போக்கில் தனது பேயோட்டம், பில்லி, சூனியம், மாந்திரீகம் போன்ற துர்ச் செயல்களால் கொலைப் பலிக்கு ஆளாகும் தர்மலிங்கத்தைக் காப்பாற்ற தன் வாழ்வையே தியாகம் செய்கிறாள் ரங்கம். சாமியார் வேடத்தில் நாடு கடந்து ரங்கோன் போய் விடுகிறாள். அங்கே மனந்திருந்தி **'பர்மா நாயுடு'**வாக வாழும் பூசாரியின் மன்னிப்பை ஏற்று, அவரது தாயற்ற சேய்க்குத் தாயாக வாழ்கிறாள்.

தியாகம் மதிப்பிழந்து போய் துரோகமும் பேராசையும், தான் விட்டுச் சென்ற ஒரே மகனையும் ஏமாற்றும் என்ற சூழலில் தாயகம் திரும்பி வந்து, உண்மைகளை அம்பலப்படுத்தி, தர்மலிங்கம் மற்றும் தங்கத்தின் முகத்திரையைக் கிழித்து அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துகிறாள்.

**"ஓ நீங்க அவங்களா! உள்ள நுழையும்போதே 'வணக்கம்' என்று சொன்னபோதே நெனச்சேன்" என்கிறார். அதாவது 'வணக்கம்' எனும் தமிழ் விளிப்பு, தோஷ நம்பிக்கையில்லையென்ற பகுத்தறிவாளர்களின் அடையாளம்.**

### பகுத்தறிவாளர் அடையாளம்

திரைப்படத்தின் முழு நோக்கமே பக்தி வேடமிட்டு, பூஜை, புனஸ்காரம், வேள்வி, தலையெழுத்து, கடவுளின் செயல், என்று ஏமாற்றுவோரை வெளிப்படுத்துவதே. காட்சியமைப்புகளே கருத்துகளைச் சொல்லும் படமாக இது உருவாக்கப்பட்டிருக்கும்.

தங்கத்தைப் பெண் கேட்டு வருவோரிடம் தர்மலிங்கம், அவளுக்குச் செவ்வாய் தோஷம் என்கிறார். வந்தவர்கள் எங்களுக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை என்று கூற, "ஓ நீங்க அவங்களா! உள்ள நுழையும் போதே 'வணக்கம்' என்று சொன்ன போதே நெனச்சேன்" என்கிறார். அதாவது 'வணக்கம்' எனும் தமிழ் விளிப்பு, தோஷ நம்பிக்கையில்லையென்ற பகுத்தறிவாளர்களின் அடையாளம். தாலாட்டும், 'தமிழே தேனே கண்ணே தாலேலோ' என்றே பாடப்படுகிறது.

அந்தக் காட்சியிலேயே தங்கத்தை அடையும் அவரது திட்டத்தை எதிர்க்கும் ரங்கத்தை, 'நீ என் அடிமை' என்கிறார். திராவிட சினிமா தொடர்ந்து பேசி வந்ததில் முதன்மையானது பெண்ணுரிமையே. இந்தப் படத்திலும் பேயோட்டியை எதிர்த்து, 'நிறுத்து நானா பிசாசு' என வாதிடுகிறாள். அவளைப் பித்தம் கலங்கச் செய்யும் அவர்களது முயற்சியை முறியடிக்க முனைந்து போராடுகிறாள். அதில் வெற்றியும் காண்கிறாள்.

### கோட்டையூர் பொருளாதாரத் திட்டம்

திராவிட சினிமாவின் மற்றொரு கூறு, துணிச்சலாக ஆண்களைத் தயக்கமின்றி எதிர்த்துப் பேசும் எளிய / வேலைக்காரப் பெண்கள். இதிலும் ரங்கத்துக்கு ஆதரவான துளசி, அதைச் செய்து கொலைக்கு ஆளாகிறாள். ரங்கம் தனக்கெதிரான சதிச்செயலை, "கண்ணன் மீரா கதையிலே கூட இப்படி நடத்தப்படவில்லையே! இங்கே அக்கா பேயாக்கப்பட்டாள், பிசாசாக்கப் பட்டாள்" என்கிறாள். "அந்த வள்ளித் திருமணத்தில் யானை. இங்கே பேய். அதிலே குமரன் கிழவனான். இதிலே கிழவன் குமரனானான்" எனப் புராண, இதிகாச ஒப்பீடுகளைப் பேசுகிறாள். உச்சமாக, "என்றுதான் திருந்துவதோ இந்த ஆடவர் உலகம்" என்ற சிதம்பரம் ஜெயராமன் குரலில் பாடலும் உண்டு.

நினைத்தது நடக்கும் 'சிந்தாமணி' எடுத்துத் தருவதாகவும், ரங்கத்தை நிரந்தரமாகப் பைத்தியமாக்குவதாகவும் சொல்லி வரும் ஆசாமியான கொலைகாரன், 'ஆண்டவன்' என்று அழைக்கப்படுகிறான். பேயோட்டும் பூசாரி, ஆண்டவன் எனும் பாத்திரங்களுக்கெதிர் நிலையில் 'மகான்' ஆகிறாள் ரங்கம். முன்னவர்கள் அநீதிக்குத் துணை போகிறவர்கள் என்றால், இந்த 'பெண் மகான்' தியாகி, அன்பின் திரு உருவாக வாழ்கிறாள்.

மாறாக நாகசுந்தரம், பகுத்தறிவாளன், சமஸ்கிருதம், இந்தி படித்திருக்கும் பெண்ணை தமிழ் அறியாதவள் என்பதால் நிராகரிக்கிறான். பொதுக் காரியங்களில் ஈடுபட்டு மக்கள் சேவை செய்கிறான். அப்படியான ஒரு சூழலில், 'பர்மா நாயுடு' மருத்துவ நிலையத்தில் நடக்கும் கலவரத்தைத் தடுத்து, இறந்துவிட்டதாகச் சொல்லப்பட்ட தனது தாய் ரங்கத்தைச் சந்திக்கிறான். அம்மாவின் நிலை அறிந்து குமுறுகிறான்.

உடனடியாக தனது அப்பாவின் இழிசெயலை **'கோட்டையூர் பொருளாதாரத் திட்டம்'** என கடுமையாக அம்பலப்படுத்துகிறான். எந்தக் கோட்டையூரில் தாய் அவமதிக்கப்பட்டாரோ அதே மக்கள் முன்னிலையில் அப்பாவின் செயல்களை வெளிப்படுத்தி, அவர்களை அவமதிப்புக்கு ஆளாக்குகிறான். அம்மாவின் வளர்ப்புப் பெண்ணான ராதாவை, கோட்டையூர் மக்கள் சாட்சியாக மண ஒப்பந்தம் மூலம் இணையாக்கிக் கொள்கிறான். அவனது சுயமரியாதை சிந்தனை இருள் விலக்கும் உதயசூரியன் என விளிக்கப்படுகிறது.

...படம் விரியும்

---

## அறிவியலால் சிறக்கும் தெற்கு!

'வடக்கு, பழமைவாதத்தில் ஊறியது. தெற்கு, முன்னேற்றத்தின் பாதையில் நடப்பது. வடக்கு, மூடநம்பிக்கை கொண்டது. தெற்கு, பகுத்தறிவு உடையது' என்றார் அம்பேத்கர். அவர் சொன்னது, எத்தனை அர்த்தமுள்ளது என்பதை, சமீபத்திய ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

பள்ளி முடித்த பிறகு, கலைப் படிப்புகளைத் தேர்வு செய்வதைக் காட்டிலும், அறிவியல் துறைப் படிப்புகளில் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தி வருகின்றன. வட இந்திய மாநிலங்களைக் காட்டிலும் மனித வளக் குறியீடுகளிலும், பொருளாதார வளர்ச்சியிலும் தென்னிந்திய மாநிலங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் மீது தென்னிந்திய மாணவர்கள் கொண்டிருக்கும் மோகமும் முக்கிய காரணமாகும்.

கல்வியில் மட்டுமல்ல. படித்து முடித்த பிறகு, பணியிலும் தென்னிந்திய மாணவர்கள் சாதிக்கிறார்கள். அதன் ஓர் அடையாளம்தான், 1958-ஆம் ஆண்டு முதல் அறிவியல் துறையில் சாதனை புரியும் இளைஞர்களுக்கு வழங்கப்படும் ஒன்றிய அரசின் **'சாந்தி ஸ்வரூப் பட்நாகர்'** விருதை, தென்னிந்திய மாநிலங்களைச் சார்ந்தவர்களே அதிக முறை வென்று வருவது!

---

## :ப்ளாஷ்பேக்



### பொதுக்கூட்டப் பெருமை!

மயிலைப் பகுதி முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெருவில் 1966-ஆம் ஆண்டு, மாமன்ற உறுப்பினர் ஏ.சி.துளசிங்கம் தலைமையில் தெருமுனைப் பிரசாரப் பொதுக் கூட்டம் நடை பெற்றது. அவர் என்னுடைய மாமா. அந்தக் கூட்டத்துக்கு, அன்றைய கழக அமைப்புச் செயலாளரும், 'திராவிடன்' வார இதழ் ஆசிரியருமான என்.வி. நடராசன் அவர்கள் வருகை தந்து சொற்பொழிவாற்றிய போது எடுத்த படம் இது. பலமுறை இந்தப் படத்தை என்னிடம் காட்டி, அந்த நிகழ்வைப் பற்றிப் பெருமை பொங்க நினைவு கூர்ந்துள்ளார் எனது மாமா.



ரங்கராஜன்

**- ஆர்.ரங்கராஜன், செயற்குழு உறுப்பினர், புனித தோமையார் மலை, சென்னை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### தாராவி மக்களின் பற்று!

**1966 நவம்பரில், மும்பை, அகமதாபாத் நகரங்களில் நடந்த கழகக் கூட்டங்களுக்குப் பயணப்பட்டார் கலைஞர். மும்பை ரயில் நிலையமே அதிரும் அளவுக்குக் கழகத்தினரின் வரவேற்பு இருந்தது. மாதுங்கா-போதர் கல்லூரியிலிருந்து தாராவி வரை ஊர்வலம் அமர்க்களப்பட்டது. கலைஞர் கலந்துகொள்ளும் கூட்டத்தைத் தடை செய்ய வேண்டும் என சில கட்சிகள், காவல்துறைக்குக் கொடுத்த அழுத்தத்தை, கழகத் தொண்டர்கள் முறியடித்தனர். கலைஞர் பேச்சைக் கேட்க மக்கள் கடலெனத் திரண்டிருந்த கூட்டத்துக்குள், இறந்த நாய்களைக் கொண்டு வந்து போட்டுவிட்டுச் சென்றனர் கூட்டத்தைக் கலைக்க நினைத்தவர்கள். தாராவி மக்களின் கழகப் பற்றுக்கு முன், அந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 164




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.